கேம்ஸ் (CAMS) சங்கத்தின் 3-வது செயற்குழு கூட்ட அறிக்கை

நாள்: 20/06/2026 (சனிக்கிழமை)

நேரம்: மாலை 5:00 மணியளவில்

இடம்: ஆனந்தாஇன் ஹோட்டல் (Anantha Inn), பாண்டிச்சேரி

கூட்டத்தின் தொடக்கம் & வரவேற்புரை:

கேம்ஸ் சங்கத்தின் 3-வது செயற்குழு கூட்டம் வெளியூர் கூட்டமாக பாண்டிச்சேரி அனந்தா இன் ஹோட்டலில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சங்கத்தின் நிர்வாகக் குழு உறுப்பினர்கள், ஆலோசகர்கள் (Advisors) மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். சங்கத்தின் தலைவர் அவர்கள் வருகை தந்திருந்த அனைவரையும் வரவேற்று உரையாற்றினார். (ஒரு சில செயற்குழு உறுப்பினர்கள் மட்டும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை).

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மற்றும் முடிவுகள்:

தீர்மானம் 1 (நிறுவனர் உறுப்பினர் நியமனம்):

நமது சங்கத்தின் மூத்த உறுப்பினர் திரு. கல்யாணகுமார் (SK Marketing) அவர்களை 'நிறுவனர் உறுப்பினர்' (Founder Member) ஆக நியமனம் செய்வது குறித்து ஆலோசிக்கப்பட்டு, ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவருக்குச் சந்தா தொகை கிடையாது. மேலும், கான்ஃபெட் (Confed) மற்றும் கேம்ஸ் (CAMS) சங்கத்தின் இதர சலுகைகள் எதுவும் இவருக்கு வழங்கப்பட மாட்டாது.

தீர்மானம் 2 (புதிய உறுப்பினர் அறிமுகம்):

நமது சங்கத்தில் புதிய உறுப்பினராக இணைந்துள்ள திரு. கார்த்திக் குமார் (Laser Care) அவர்கள், நிர்வாகத்திற்கும் செயற்குழு உறுப்பினர்களுக்கும் முறைப்படி அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்.

தீர்மானம் 3 (வணிக மேம்பாட்டுத் திட்டம்):

சங்க உறுப்பினர்களின் தொழில் மற்றும் வியாபாரத்தை மேம்படுத்தும் நோக்கில், நமக்குள்ளேயே ஒரு வணிக மேம்பாட்டுத் திட்டத்தை (Business Promotion Programme) நடத்துவது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதற்கான அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும்.

தீர்மானம் 4 (பணியாளர்கள் பற்றாக்குறைக்கான தீர்வு):

உறுப்பினர்களின் நிறுவனங்களில் உள்ள பணியாளர்கள் பற்றாக்குறையைப் போக்குவது குறித்து விவாதிக்கப்பட்டது. இதற்காக ITI, பாலிடெக்னிக் மற்றும் கல்லூரிகளில் பயின்ற மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் வகையில் ஒரு வேலைவாய்ப்பு முகாம் (Job Fair) ஏற்பாடு செய்வது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

தீர்மானம் 5 (மருத்துவ முகாம்):

தமிழ் மருத்துவம் சார்ந்த ஒரு சிறப்பு மருத்துவ முகாம் விரைவில் நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானம் 6 (சந்தா தொகை வசூல்):

உறுப்பினர்களிடம் இருந்து வரவேண்டிய சந்தா தொகையை (Subscription Fee) விரைவில் முழுமையாக வசூல் செய்வது குறித்து விவாதிக்கப்பட்டது.

தீர்மானம் 7 (R.O.C பதிவு நடைமுறைகள்):

R.O.C (Registrar of Companies) பதிவு தொடர்பாக, ஆலோசகர்கள் திரு. முத்துசாமி

மற்றும் திரு. ராஜ்குமார் ஆகியோரின் கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இதற்காக நியமிக்கப்பட்ட திரு. செந்தில்குமார் (Sensor) அவர்கள், விடுபட்ட 2 ஆண்டுகளுக்கும் சேர்த்து இப்பணிகளை விரைந்து முடிப்பது பற்றிப் பேசப்பட்டது.

நிகழ்வின் நிறைவு:

கூட்டத்தின் இடையே செயலாளர் திரு. சி. பிரகாஷ் அவர்களின் பிறந்தநாள் கொண்டாட்டம் எளிய முறையில் நடத்தப்பட்டது.

இறுதியாக, துணைச் செயலாளர் திரு. அமர்நாத் அவர்கள் நன்றியுரை ஆற்ற, கூட்டம் இனிதே நிறைவுற்றது.

Absentees

OBS Team:

Vice President

A. Thirumaran— (Bhagwans Computer)

(Executive Members):

(K. Chandrasekaran) — (KCS Computer And Communication)

(Santhana Kumar. M) — (The Matrix Infotech)

(M. Selva Kumar) — (SL Infotech)

(J Mohamed Jbrik Ali) —(Jbrik Computers)